அருள்தருவாள்

# அன்னை திரௌபதி



பாடல் : **பாண்டித்துமிலன் (பாஸ்கரன்)**

வதனா வெளியீடு

இளம்பிறை ஒப்செற் - மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தரும்

# அன்னை திரௌபதி

பாடல்: **பாண்டித்துமிலன் (பாஸ்கரன்)**

வதனா வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இந்து சமயத்தில் ஐந்தாம் வேதம் என்று குறிப்பிடப்படும் மகாபாரதக் கதையின் நாயகி திரௌபதி தேவியை அன்னை பராசக்தியின் வடிவமாகக் கொண்டு வருடம் தோறும் பள்ளயம் போட்டு வழிபாடியற்றி அருள் வளம் சேர்க்கும், பழம் பதி, பாண்டிருப்பு.

பாண்டிருப்பு என்றால் பாண்டவர்கள் இருப்புக் கொண்ட இடம் எனவும் பொருள் கொள்ளலாம். என்பதை இங்குள்ள வரலாற்றுப் புகழ்மிக்க திரௌபதி அம்மன் கோயில் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

இவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்டு சைவப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வரும் திருவாளர், பாஸ்க்கரன் (பாண்டித்துமிலன்) அவர்கள் "அருள் தருவாள் அன்னை திரௌபதி" என்னும் இச்சிறு காவியத்தை ஆக்கியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆண்டு தோறும் இடம்பெறும் தீப்பள்ளய உற்சவகாலத்தில் பாரதக்கதையை பாயிரமாகப் பாடிப் பயன் கூறி, பக்தி ரசம் பெருக்கச் செய்யும் இவர் மிகவும் கவித்துவமாக சொற்பஞ்சம் எதுவுமின்றி இலகு தமிழில் இசையோட்டத்துடன் இயற்றியுள்ள இப்பாடல்கள் சந்தங்கள் நிறைந்தவையாகவும், பாரதியின் பாஞ்சாலி சபதப் பாடல்களை ஞாபகமூட்டுவதாகவும் காணப்படுகின்றது.

மாணிக்கப்பிள்ளையார் மீது பாடியுள்ள பாடல்களும், கண்ணனைப் பாடுவோம் என்ற பாடலும் இப்பாடற் தொகுதியில் இடம் பெற்றிருப்பது சிறப்பைத் தருகிறது. ஆலய உற்சவங்களில் இசையுடன் பாடுவதற்கு இவை மிகவும் பொருத்தமானவை என்பது எனது அபிப்பிராயம்.

பாடலாசிரியர் அவர்கள் மேலும் பல பக்திச் சுவை மலிந்த பதிகங்களைப் பாடி, தனது ஆற்றலை வெளிக்காட்டி சைவ இலக்கியப் புலத்தை வளப்படுத்த வேண்டும் என்று ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

**திரு. ரி. சிவராஜலிங்கம்**
பிரதமபொறியியலாளர்

*வீதி அபிவிருத்தித் திணைக்களம்*
*அம்பாறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நீர்வளமும் நிலவளமும் சிறப்புற்றோங்கும் மீன்பாடுந் தேனாடாம் மட்டுநகருக்குத் தெற்கே இருபத்து நான்காவது மைல் கல் தொலைவில் பல்வளமும் பொருந்திச் சிறப்புற் றோங்கும் பாண்டிருப்பென்னுந் திருப்பதியிலே ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கொங்கு தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தாதன் என்னும் தபோதனன் அகிலமெங்கும் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்ற மகாபாரதக் கதையின் நாயகியாகப் போற்றப்படுகின்ற அன்னை திரௌபதா தேவிக்கு. ஆலயம் அமைத்து மகாபாரதத்தின் வரலாற்றுச் சிறப்பினைப் பதினெட்டுப் பருவங்களையும் பதினெட்டு நாட்களாகக் கணித்து பூசனை செய்து அடியவர்களும் பாரதக் கதையின் சிறப்பினை உணரச் செய்யும் வண்ணமாகக் கோயில் அமைப்பதற்குப் பொருத்தமான தலமாகக் கண்ட பாண்டிருப்பென்னும் பழம் பெரும்பதியிலே குடிகொண்டிலங்கும் மூன்று தெய்வங்களான ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் . காத்தல் கடவுளாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பத்தினித் தெய்வமாம் அன்னை திரௌபதா தேவி ஆகிய தெய்வங்கள் பேரிலும் நினைந்து உள்ளமுருகிப் பாடலியற்ற வேண்டும் என்னும் விருப்பம் என் நீண்ட கால எண்ணம் நிறைவுபெற எனக்கு அருள்புரிந்த முத்தெய்வங் களுக்கும் என்அன்புக் காணிக்கையாக எனது நன்மதிப்புக்குரிய அன்னை தந்தையர் எனது குருவாக விளங்குகின்ற சிவசிறி ப.கு. மா. கு. சதாசிவ ஐயர் சமாதான சபைத் தலைவர் சித்த ஆயுள்வேத மருத்துவ பண்டிதர் அவர்களின் நல்லாசியோடு தங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

*இவ்வண்ணம்*

*ஆசிரியர்*
**பாண்டித்தமிலன் பாஸ்கரன்**
விவேகானந்த வீதி,
பாண்டிருப்பு -01.
**08-04-1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்குருவின் நல்லாசியுரை

கங்கை வளமும் காவேரி நீர்வளமும்
மங்காத் தமிழ் வளமும் மாறாத்திரு நாட்டில்
சிந்து நதி பெருகி திரை புரண்ட தன்மையினால்
வந்தேயுதித்தது இந்த வளமான சீரிலங்கை

பாண்டவரும் பாஞ்சாலி பரந்தாமன் தன்னுடனே
பூண்ட கருணை பொலிவு பெறும் தன்மையினால்
பாண்டிருப்பென்ற பழம் பெருமை பார்புகழ்
தன்னகத்தே கொண்டு தனிப்பெருமை பெற்றதுவும்

வாழை பலாக்கனியும் வான்கமுகு தேன்கரும்பு
மாறாது என்றும் விரிந்து பொலிந்திருக்கும்
சென்னெல் வயலும் சீர்களனி சேல் இனமும்
பன்னல்குமுதம் பசுவல்லி பாரில் சிறக்கும்

சீரோங்கு செல்வத் திருவிளங்கு பாண்டிருப்பில்
ஏரோங்கு வேழாழர் நற்குடியில் வந்துதித்த
பேரோங்கு திருவிளங்கம் பிதா மாதா இராசம்மா
பாரோங்கு செய்தவப்பயனான பாஸ்க்கரனும்
பார்ப்பார்குலத்துப் பஞ்சாட்சரம் வளிவந்த
மாணிக்கமீன்ற மணிவிளக்காய்த் திகளும்
சதாசிவனார் தன்னைத் தன்குருவாகக் கொண்டு
பாரதமும் கந்தப் புராணமுங் கற்றுணர்ந்தார்

ஐந்துகரத்தினையும் ஆறுமுகத்தினையும்
பரந்தாமன் பாண்டவர்கள் பாஞ்சாலி தன்னையும்
சிந்தையிலே யுதித்த சிந்தனையினால் துதித்து
பந்தமறப் பாடம் பரம்பொருளே நீ துணையே.

இவ்வண்ணம்

சிவ ஸ்ரீ
**ப. கு. மா. கு. சதாசிவ ஐயர் அவர்கள்**
சமாதான சபைத் தலைவர்
சித்தமருத்துவ பண்டிட் (மதுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் தலைமைத் தமிழாசனும் கல்முனைத் தொகுதி
இந்து மாமன்றத் தலைவருமாகிய

## திரு. சி. காசிபதி - தெய்வ நாயகம் ஜே.பி.

அவர்கள் அளித்த

# அணிந்துரை

பாரதம் புகழ்ந்தேத்தும் பாஞ்சாலியைப் பராசக்தியின் வடிவாகக் கண்டு அவளுக்கு கோயிலெடுத்து தம்குல தெய்வமாக்கி அவள் அருளால் வாழ்ந்து வளம் பெறும் செந்தமிழ்க் குலத்தார் வாழ்வது பாண்டிருப்பு என்னும் பழம்பதி யென்க

இப்பதியைத் தாயகமாகக் கொண்டு அங்குள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து வாழ்பவரும் அன்னை திரௌபதி ஆலயத்தில் அவள் அருளால் ஈர்க்கப்பட்டு ஆண்டு தோறும் உற்சவகாலத்தில் பதினெட்டு நாட்கள் தொடர்ந்து பாரதம் பாடிப்பயன் பல கூறி அடியவர்களை அன்னையின் அருளுக்கு ஆட்படுத்துபவரும் பாண்டித்துமிலன் எனத்தன்னை அறிமுகப்படுத்து பவருமாகிய இந்த நூலாசிரியர் திருவாளர் தி. பாஸ்கரன் அவர்கள் தனது இதயத்தில் மலர்ந்த நிறை மொழிகளைப் பலவண்ணப் பாமாலைகளாக்கி

வெங்கூரெழுத்தாணிதன் கோடாகக்கொண்டு பாரதமெழுதி உலகிற்கு உதவிய மூத்தபிள்ளையாருககும் கீதையை உபதேசித்த கண்ணனுக்கும் தெய்வதமான திரௌபதிக்கும் சூட்டுகின்றார். இது பக்தியின் மரபும் மாண்புமாகும் பக்தியின் மேலீட்டால் இலகு தமிழில் இனிய சந்தங்களுடன் பாரதியின் வழி வந்த பாடல்கள் ஆசிரியரின் பக்தியையும் கவித்துவத்தையும் பறை சாற்றி நிற்கின்றன.

அடியவர்கள் பாடிப்படித்து பொருளறிந்து பக்திசெய்து பயன் பெறுவார்களாக

இவ்வண்ணம்

**சி . காசிபதி தெய்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கப்பிள்ளையார்

தண்டையோடு கிண்கிணி சல்லரி மத்தளம்
தாரணியெங்கு மொலிக்க
வண்டல் நிறைசுனைகளில் தாமரை மொட்டுகள்
வாய்விரித்தே சிரிக்க
கொண்டலொடு மாருதங் கூடிக்குலவியே
கோடைதனில் மாரிபொழிய
அண்டரும் போற்றிட அகிலமுந்துதி செய்ய
அருள் தரும் பிள்ளையாரே

விண்தலமீதிலே உன்புகழ் பாடிட
வீரிய ஞானமருள்வாய்
கண்ணுதற் பொருளுக்கு முதற்பிள்ளையாகவே
காசினியிலே உதித்தாய்
நண்ணுமறை போற்றிடும் நற்குஞ்சரத்தனே
நானிலம் போற்றுமுதலே
மண்தலம் புகழ்ந்தெடுத்து பாண்டிருப் பூரிலுறை
மாணிக்கப் பிள்ளையாரே

குண்டலஞ் செவிகளிற் குலுங்கி அசைந்திட
கூர்விழி பார்வை அருள்
மண்டலந் தனிலொளி மண்டிப்பரவிட
மாசற்ற சோதிவடிவாய்
தொண்டரைக் காத்திடும் சுழிகொண்டகையனே
தொல்லைகள் தீர்த்தருளுவாய்
மண்டாத புகழ் கொண்ட பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப் பிள்ளையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமரைகள் வீசிடச் சரிகை சொலித்திட
சந்தனம் வாடை வீச
காமனை யெரித்தவன் மூத்த புதல்வனே
கற்பகப் பொருளானவா
தேமதுரத் தமிழாலே நின்புகழ் பாடினேன்
தெள்ளமுதான சுவையே
மாமருது நிழல்தரு பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப்பிள்ளையாரே

வேதமுதற் பொருளாகி வித்தைக்கு முதலாகி
நாதத்தின் ஒலியாகியே
பாவ இருளகற்றிடும் சோதிவடிவானவா
பழமை பெறு முதலாகியே
வேதனை யகற்றிடும் விக்னவினாயாக
வெண்கோடு கொண்ட முதலே
தாமநிறை மலர்கொண்டு நின்னடிபணிந்திட
தமியேற்கு வரமருளுவாய்

சீதமதிக் குடையுடன் சித்திரசிம்மாசனம்
சிறந்தபொன் மணியாரமும்
பாதமதிற்கொலுசுடன் பல்வகைச்சோடசம்
பருதியென ஒளிவீசிட
மாதுமை புதல்வனே மாசற்ற சோதியே
மனமகிழ்ந்தே பணிந்தோம்
ஏது பிழை செய்யினும் யாதுகுறைநேரினும்
எங்களைக் காத்தருளுவாய்

கற்றவர் போற்றிடும். கற்பகக்கணபதி
காத்தருள் தயாநிதியே
பற்றினை அறுத்தெமை ஆண்டருள் புரிந்திடும்
பரம்பொருளான முதலே
சிற்பர மூர்த்தியே தீவினையகற்றிடும்
சீர் பெறு பிள்ளையாரே
மற்றொரு பிறப்பிலும் காண்பதற்கரிதான
மாணிக்கப்பிள்ளையாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதக் கூத்துடை ஆனைமுகத்தவா
ஆனந்தமயமானவா
நற்பதந்தந்தெமைக் காத்தருள்புரிந்திடு
நாரணன் தனக்கு மருகா
பொற்பாத கமலங்கள் போற்றிடுமெக்கு
போகங்கள் யாவுமருள்வாய்
மத்தள வயிறுடனே பாண்டிருப் பூரிலுறை
மாணிக்கப் பிள்ளையாரே

நற்றவர் காணாத நான்மறைப் பொருளே
நம்பினோம் காத்தருளுவாய்
அற்புதக் கழிறே ஐயங்கரத்தோனே
ஆண்டருள் பிள்ளையாரே
சொற்பதங்கடந்த சுடர்மணிவிளக்கே
சோதிவடிவான உருவே
பொற்பாத கமலங்கள் போற்றிடுமெமக்கு
பொறுமையொடு தயையருளுவாய்

பட்டுப் பிதாம்பரம் பவளமணி மாலையோடு
பாசாங்குசம் பொருந்த
இட்டமுடன் அடியாரைக் காத்தருள் செய்திட
ஈசன்மகனே வருவாய்
துட்டரை அடக்கியே நிக்கிரகஞ் செய்திடும்
தூய ஒளியான பொருளே
மட்டிலாப் புகழ் கொண்ட பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப் பிள்ளையாரே

மட்டுநகர் தெற்கிலே வயல்சூழ் பதியிலே
மாட்சியுற வந்தமர்ந்தாய்
முத்துநிரை அலைபரவு வங்கமலி கரைதனில்
மூசிகந்தனில் அமர்ந்தே
கொத்துமலர் விரிந்திடக் குவளைகள்
மலர்ந்திட
கோயில் கொண்டருள்புரியும்
மத்தகய முகத்தோடு பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப்பிள்ளையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத பொய்கையும் வளமான கழனியும்
வாகான நிழல்தருச்சூழ
குற்றால அருவிபோல் குளிர்தருதென்றலும்
குருகினம் பாடுபொழிலும்
பொற்றாமரையோடு அல்லியும் ஆம்பலும்
பூத்துக் குலுங்குமெழிலும்
விற்போல் வளைந்த பெரு குளக்கரையருகிலே
வினாயகா வீற்றிருப்பாய்

கற்றாரைக் காமுறுங் கல்விக்கோர் கூடமும்
கயல் விளையாடு சுனையும்
புற்தரைதனிலெங்கும் மந்தைகள் சூழ்தர
பூரித்துப் பால்சுரக்கும்
முற்றியகமுகிலே பாளைவிரிந்தொளி
முழுநிலவாயெறிக்கும்
மற்றாரை விருந்தோம்பும் பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப்பிள்ளையாரே

குன்றாத கல்வியும் குறையாத செல்வமும்
குவலயந்தனிலெமக்கு
தந்தாள வேண்டுமருள் சக்திதன் புதல்வனே
தாழ்பணிந்தெ துதித்தோம்
மண்றாடித் துதிசெய்யும், அடியார்தமக்கு
மனமகிந்தேயருளுவாய்
மங்காத புகழ்கொண்ட பாண்டிருப்பூரிலுறை
மாணிக்கப் பிள்ளையாரே.

வண்டார் நறுந்தேனும் வாழைபலாக்கனியும்
செண்டார் மலருஞ் சிறு கிழங்கும்
துண்டாய்க் கரும்புமிள நீர் அவலுடனே
பண்டமுறு அப்பம் கடலைவடை
கொண்டே படைத்துன்னைக் கும்பிட்டோம்
குன்றாடல் செய்யும் குமரவேள் சோதரனே
பொன்றாத செல்வமும் புகழோங்கு கல்வியும்
தந்தாளுவாய் ஞானக்கணபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனைப்பாடுவோம்

கண்ணன் எழுந்து வருவானடி அவனை
காணக் கண்கோடிகள் வேண்டுமடி
மண்ணில் அவனைக் காண்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமடி

வெண்ணை திருடிய கண்ணனடி அவன்
வேடிக்கை காட்டும் கண்ணனடி
பண்ணையில் ஆதிரை மேய்த்தவனாம் கண்ணன்
பாற்கடல் தன்னில் துயில்பவனாம்

மண்ணை அளந்த கண்ணனடி அவன்
மாயைகள் செய்திடுங்கண்ணனடி
திண்ணைகள் தோறும் விளையாடி நல்ல
தித்திப்பாய்ப் பேசி மருட்டிடுவான்.

பால்தயிர் உண்டுமகிழ்பவனாம் கண்ணன்
பாண்டிருப்பில் குடி கொண்டவனாம்
வேல்விழி மங்கையர் காதலனாம் - நான்கு
வேதம் பகழ்ந்திடு நாயகனாம்.

வேற்படையோனுக்கு மாமனடி எங்கள்
வேழமுகத்தனுக் கம்மானாம்
நாற்திசையும் புகழ்கண்ணனடி நல்ல
நளினங்கள் காட்டிடுங் கண்ணனடி

நாற்படை தன்னை நடத்திடுவான் கண்ணன்
நம்பியபேரைக் காத்திடுவான்
தேர்ப்படை தன்னைச் செலுத்தியதால்- அவன்
தேரோட்டி என்ற பெயர் பெற்றானடி.

அகலிகை சாபம் தீர்த்தவனாம் கண்ணன்
அர்ச்சுனனுக்கு மைத்துனனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதனைதன்னைக் கொன்றவனாம் - இந்தப்
பூவுலகந்தனை உண்டவனாம்.
கஜமுகா சூரனைக் கொன்றவனாம் பொல்லாக்
காளியனில் நடமாடிடுவான்
புயலின் நிறத்தை உடையவனாம் கண்ணன்
பூமலரோனுக்குத் தோழனடி.

பகலை இரவாக மாற்றிடுவான் கண்ணன்
பக்தரைக்காப்பதில் வல்லவனாம்
அபயமளிப்பதில் கண்ணனைப்போல் இந்த
அகிலத்தில் யாருமில்லையடி.

மாவிலை தோரணங் கட்டுங்கடி வண்ண
மாலைகள் கோத்துச் சூடுங்கடி
ஆலிலை மீதினில் பள்ளிகொள்ளும் - எங்கள்
அனந்த சயனனைப் பாடுங்கடி

பூமலர் கொண்டு தூவுங்கடி வண்ணப்
புத்தம் புதுப்பட்டுச் சாத்துங்கடி
சாமரை கொண்டு வீசுங்கடி - நல்ல
சல்லாரி கொட்டிப் பாடுங்கடி

பாரதக் கதை நாயகனாம் கண்ணன்
பார்த்தனுக்குத் தே ரூர்ந்தவனாம்
நாரதனுக்குச் சோதரனாம் - கண்ணன்
நரசிங்க ரூபங் கொண்டவனாம்

அச்சுதன் என்றுபேர் கொண்டவனாம் பொல்லா
அசுரர்கள் தம்மை அழித்தவனாம்
மொச்சை முடைநாறும் வாயானாம் - கண்ணன்
மோகனப் புன்னகை செய்வானாம்.

தீதியை மாற்றிய தீரனடி கண்ணன்
தீமைகள் போக்கிடும் வள்ளலடி
விதியை மாற்றிடவல்லவனாம் கண்ணன்
வீதி வலம்வரும் மாட்சியென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாபிஷேகஞ் செய்திடுவோம் பசுந்
தேனாபிஷேகஞ் செய்திடுவோம்
பன்னீரபிஷேகஞ் செய்திடுவோம் - நல்ல
பழங்கொண்டபிஷேகஞ் செய்திடுவோம்

நாலுவித மலர்தானெடுத்து - எங்கள்
நாரணனுக்குச் சாத்திடுவோம்
பண்டாரங்கொண்டு பொட்டிடுவோம் எங்கள்
பாவங்கள் தீர்ந்திடக் கும்பிடுவோம்.

செந்தூரப்பொட்டு மிட்டிடுவோம் - கண்ணன்
சேவடி போற்றி வணங்கிடுவோம்
அண்டர்கள் போற்றிடும் நாயகனை நாம்
ஆனந்தக் கூத்தாடிப் பாடிடுவோம்.

சிந்துகள் பாடிவாழ்த்திடுவோம் - நாங்கள்
செப்புக் குடமேந்தி ஆடிடுவோம்
வசந்தனடித்து ஆடிடுவோம் - நல்ல
வாழ்த்துக்கள் பாடித்துதித்திடுவோம்.

காவடிகள் ஏந்தி ஆடிடுவோம் - வண்ண
கரகமெடுத்து நாமாடிடுவோம்
தேவகி பாலனை ஏத்திடுவோம் எங்கள்
தென்மதுரையானை வாழ்த்திடுவோம்.

பாவடியெடுத்துப் பாடிடுவோம் கண்ணன்
பன்னிரு நாமங் கூறிடுவோம்
பூவடிபோற்றி வணங்கிடுவோம் - நாம்
புதுமலர் சூடிப்பாடிடுவோம்.

கோபாலனென்று பேரெடுத்தான் நல்ல
கோவிந்தனென்றும் பேரெடுத்தான்
பூபாலர் யாவர்க்கும் தெய்வமடி கண்ணன்
புதுமைகள் செய்வதில் வல்லவனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு சக்கரமும் ஏந்திடுவான் -கெட்ட
சண்டாளர் தம்மைக் கொன்றிடுவான்
எங்கள் குலதெய்வம் கண்ணனடி அவன்
ஏழை எழியோர்க்குத் தோழனடி.

பங்கயம் போலுங் கண்ணுடையான் - கண்ணன்
பத்மநாபன் என்னும் பேருடையான்
செங்கையில் தண்டினை ஏந்திடுவான் - அவன்
சேவடி போற்றிப் பணிந்திடுவோம்.

திங்கள் மரபினைக் காப்பவனாம் கண்ணன்
தீராத விளையாட்டுக் காட்டிடுவான்
எங்கும் நிறைந்த பரம்பொருளாம். அவனை
ஏத்திப் புகழ்ந்து பாடுங்கடி

மங்கையர் கூடிப்பாடிடுவோம் - கள்ள
மாயனைப் போற்றிப் பாடிடுவோம்
செங்கணவன்தனைப் பாடிடுவோம் - அவன்
சேவடி போற்றிப் பணிந்திடுவோம்

ஆநிரை மேய்க்கும் கண்ணனடி - அவன்
ஆயர்குலப் பெண்கள் காதலனாம்
தூணிலே தோன்றி இரணியனை - இரு
துண்டாய்க் கிழித்துக் கொன்றவனாம்.

வாழைகள் நாட்டி வரவேற்போம் - புது
வண்ணமாய்ச் சோடனை செய்திடுவோம்
பாளைகள் கட்டி வரவேற்போம் - எங்கள்
பரந்தாமன்தன்னை வணங்கிடுவோம்

யாழொலி குழலிசை கேட்குதடி - வண்ண
ஜாலங்கள் எங்கும் தோன்றுதடி
மாழைகொள் தேரில் வருவானடி -நான்கு
மறைகள் தொடரவருவானடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகன் கஞசன்தனை அழித்தான் - பொல்லா
வாட்சார சந்தன்தனைத் கொன்றான்
தஞ்சமடைந்தோரைக் காப்பவனாம் - எங்கள்
தாமரைக் கண்ணனைப் பாடுங்கடி

குஞ்சரந்தன்னைக் காத்தவனாம் - மலையை
குடையாக்கி கல்மழை தடுத்தவனாம்
வஞ்சனை சூதை அழித்தவனாம் - ஐவர்
வாழக்கருணை செய்தவனாம்.

தஞ்சமளித்தான் திரௌபதைக்கு - இந்தத்
தாரணி போற்றத் துயில் கொடுத்தான்
பஞ்சவர் தம்மைக் காத்திடவே கண்ணன்
பாரதப்போரில் செயிக்கவைத்தான்.

மஞ்சமமைத்த வஞ்சனைகண்டு - பொல்லா
மாவிஸ்வ ருபமெடுத்து நின்றான்
வஞ்சகன் சகுனி முதலானோர் - எங்கள்
வாமனைக் கண்டு நடுங்கி நின்றார்.

அஞ்சன மேனி அழகனடி - கண்ணன்
ஆயிரம் நாமங்கள் கொண்டவனாம்
நெஞ்சில் அவன் பெயருச்சரித்தே - பக்தி
நேயமுடன் பணிந் தேற்றிடுவோம்.

மச்சாவதாரங் கொண்டவனாம் - கண்ணன்
மாவலி கர்வமடக்கி வைத்தான்
பச்சை முகில் நிறவண்ணனடி - எங்கள்
பாண்டிருப்பில் உறை கண்ணனடி

கொச்சை மொழிபல பேசிடுவான் - கண்ணன்
கோவியர் தம்மை மருட்டிடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சரவில் துயில் கொளபவனாம் - ஆத்ம
நாயகன் கண்ணனைப் பாருங்கடி.

மாதவனென்றே பேரெடுத்தான் - கண்ணன்
மாயவனென்றும் பேரெடுத்தான்
அச்சுதன் என்று பேரெடுத்தான் - கண்ணன்
ஆயர்கள் வீட்டில் வளர்ந்தவனாம்

வாமனெனப் பெயர் கொண்டவனாம் - மணி
வண்ணனெனும் நாமங் கொண்டவனாம்
கூர்ம அவதாரங் கொண்டவனாம் - கண்ணன்
குவலயந்தன்னைக் காப்பவனாம்.

பாமாருக்மணி நாயகனாம் கண்ணன்
பாருலகந்தனைக் காப்பவனாம்
நாமங்கள் பற்பல கொண்டவனாம் - அவன்
நற்பெயர் கூறிப்பாடிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தருவாய் அன்னை திரௌபதா

அருள் தருவாய் அருள் தருவாய் அன்னை திரௌபதா எம்மை
ஆதரித்துக்காத்தருள்வாய் அம்மா திரௌபதா
இருளகற்றி ஒளிதருவாய் அம்மா திரௌபதா மக்களை
ஈடேற்றி வாழவைப்பாய் தாயே திரௌபதா.

பெருமையுள்ள சக்தியம்மா அன்னை திரௌபதா - தாயார்
பேரானந்தாப் பொருளே அம்மா திரௌபதா
தருமத்தைக் காத்தவளே அம்மா திரௌபதா
தாயான சக்தியம்மா தாயே திரௌபதா

ஓங்கார சக்தியம்மா அன்னை திரௌபதா - தாயார்
ஒளிவீசும் நெருப்பம்மா தாயே திரௌபதா
மருள் நீக்கி அருள்தருவாய் தாயே திரௌபதா - பொல்லா
மாயைகளை அகற்றிடுவாய் அம்மா திரௌபதா

குருநாடு தனிற் பிறந்தாய் அன்னை திரௌபதா - நீ
குவலயத்தை வாழவைப்பாய் அம்மா திரௌபதா
வருவாய் வருவாயம்மா தாயே திரௌபதா - எமக்கு
வாக்கொன்று கூறுமம்மா அன்னை திரொபதா

பாருலகில் நீயிருக்கத் தாயே திரௌபதா - எங்களுக்குப்
பயமேதும் இல்லையம்மா அன்னை திரௌபதா
ஊருக்கு நீ காவலடி தாயே திரௌபதா இந்த
உலகைக்காக்கும் சக்தியம்மா தாயேதிரௌபதா

யாரும் உன்போல துணையில்லை அம்மா திரௌபதா
எங்களை
ஆதரித்துக்காருமம்மா தாயே திரௌபதா
வேறுதுணை இல்லையடி தாயே திரௌபதா - இந்த
வேக்காட்டைத் தணித்தருள்வாய் தாயே திரௌபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகளாய் வலம்வருவாய் தேவி திரெளபதா எங்கள்
தீவினைகள் போக்கிடுவாய் தாயே திரெளபதா
வருபிழைகள் பொறுத்தருள்வாய் அம்மா திரெளபதா - எம்மை
வாழவைக்குந் தெய்வமம்மா அன்னை திரெளபதா

உருவெடுத்து வாருமம்மா அன்னை திரெளபதா - நீ
உத்தண்ட சத்தியம்மா தாயே திரெளபதா
தெருவெங்கும் விளக்கேற்றித் தாயே திரெளபதா - நாங்கள்
தேவியுன்னை வரவேற்போம் அம்மா திரெளபதா

துருபத தேசமதில் அம்மா திரெளபதா - மக்கள்
துயர் நீக்கப் பெண் பிறந்தாய் அம்மா திரெளபதா
கருணை வடிவானவளே அன்னை திரெளபதா - பொல்லாக்
காலனையும் உதைத்திடுவாய் அம்மா திரெளபதா

சிறுமைகளைப் போக்கிடுவாய் தாயே திரெளபதா - நல்ல
சீர்வரிசைக்காரியம்மா தாயே திரெளபதா
வறுமைதனைப் போக்கிடுவாய் அம்மா திரெளபதா -
மக்களுக்கு
வாழ்வுதந்து காத்திடுவாய் அம்மா திரெளபதா

பொறுமைக்கு இலக்கணமாம் அன்னை திரெளபதா - நீ
போதாந்த சக்தியம்மா தாயே திரெளபதா
உறுதுணையாய் நின்ற சக்தி தாயே திரெளபதா - நல்ல
உலகமகா சக்தியம்மா அன்னை திரெளபதா

கும்பத்துக்குள் குடியிருந்து அம்மா திரெளபதா - எங்கள்
குறை தீர்க்க வாருமம்மா தாயே திரெளபதா
கம்பத்தில் அமர்ந்திருந்து அம்மா திரெளபதா - மக்களை
காலமெலாங் காத்தருள்வாய் தாயே திரெளபதா

உடுக்கை முழங்கிவரத் தாயே திரெளபதா - நீ
உருக்கொண்டு ஆடிடுவாய் அன்னை திரெளபதா
மேளம் முழங்கிவரத் தாயே திரெளபதா எங்கள்
மெல்லிடையாள் ஆடிடுவாய் அன்னை திரெளபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலங்கை கலகலென அம்மா திரெளபதா - நீ
சதுராடி வாருமம்மா தாயே திரெளபதா
சிலம்பு கலலெனத் தாயே திரெளபதா உந்தன்
சிற்றிடையும் அசைந்தாடும் அம்மா திரெளபதா

வலம்புரி முழங்கிவர அன்னை திரெளபதா - இந்த
வானுலகம் அசைந்துவரும் தாயே திரெளபதா
கரகம் சுழன்றாட அம்மா திரெளபதா - வண்ணக்
காவடிகள் ஆடிவரும் தாயே திரெளபதா

பண்ணோடு உனைப் பாடத் தாயே - நீ
பாண்டிருப்பில் குடியிருந்தாய் அம்மா திரெளபதா
பல நூறு வருடமம்மா தாயே திரெளபதா எங்கள்
பதியினிலே வந்தமர்ந்தாய் அன்னை திரெளபதா

விண்ணோரும் புகழ்ந்தேத்த அன்னை திரெளபதா எங்கள்
வீதிதனில் வலம்வருவாய் அம்மா திரெளபதா
கண்ணன் அருகிருக்கத் தாயே திரெளபதா நீ
கடைக் கண்ணால் பாருமம்மா தாயே திரெளபதா

பண்டாரங்கமகமக்க தாயே திரெளபதா எங்கள்
பராசக்தி நீவருவருவாய் அம்மா திரெளபதா
மண்டாடி நாமழைக்கத் தாயே திரெளபதா - நீ
மறுக்காமல் வாருமம்மா தாயே திரெளபதா

வெண்சாமரம் அசையத் தாயே திரெளபதா எங்கள்
வேதவல்லி நீ வருவாய் அம்மா திரெளபதா
தண்டை இசை முழங்கத் தாயே திரெளபதா - உந்தன்
தாள்கொலுசு ஒலி விளங்கத் தாயே திரெளபதா.

ஆலமரம் சூழ்ந்திருக்கும் அம்மா திரெளப்தா - வெள்ளை
அரசுடனே கொக்கட்டி தாயே திரெளபதா
பால்மணக்கும் இலுப்பையோடு தாயே திரெளபதா நல்ல
பசுமருது வளர்ந்திருக்கும் அன்னை திரெளபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேம்புடனே நாவல்மரம் தாயே திரௌபதா - உன்
வீதியிலே நிறைந்திருக்கும் அம்மா திரௌபதா
செண்பகம் மலர்ந்திருக்கும் தாயே திரௌபதா - உந்தன்
சேவடிகள் தான்துலங்கும் தாயே திரௌபதா

காடேறி காவலம்மா அன்னை திரௌபதா உனக்கு
கமல கன்னி காவலடி தாயே திரௌபதா
பட்டாணி காவலம்மா தாயே திரௌபதா
பராசக்தி கோயிலிலே அம்மாதிரௌபதா

பத்திரமுங் கைப்பிடித்துத் தாயே திரௌபதா எங்கள்
பாவவினை தீத்தருள்வாய் அம்மா திரௌபதா
வித்தாரக் கள்ளியடி தாயே திரௌபதா நீ
வீரமகா சக்தியம்மா அன்னை திரௌபதா

உத்தாரஞ் செல்லுமம்மா தாயே திரௌபதா எமக்கு
உறுதுணையாய் நீயிருப்பாய் அம்மா திரௌபதா
பத்தாத பத்தினியே தாயெ திரௌபதா எங்கள்
பாண்டிருப்பில் அமர்ந்தவளே அம்மா திரௌபதா

சித்தம் மகிழ்வாகத் தாயே திரௌபதா - நீ
சீக்கிரமாய் வந்திடுவாய் அம்மா திரௌபதா
நித்தம் உனைத்தொழுதால் தாயே திரௌபதா -
பொல்லா
நிட்ரேம் அணுகாது அன்னை திரௌபதா

தத்துங் கடலருகே அன்னை திரௌபதா எங்கும்
தனியாலஞ் சோலையம்மா தாயே திரௌபதா
கொத்துக் குழையாலே அம்மா திரௌபதா - உனக்கு
கோயில் கட்டித்தான் பணிந்தார் அம்மா திரௌபதா.

கொங்கன் தபசியம்மா தாயே திரௌபதா - நாதன்
கொண்டுவந்தான் உன் சிலையைத் தாயே திரௌபதா
மங்களம் பொங்கிடவே அம்மா திரௌபதா எங்கள்
மாதாவைப் பூசை செய்தான் தாயே திரௌபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக் கிழமையிலே அன்னை திரௌபதா - உனக்கு
வேள்வி செய்து நாம் துதிப்போம் தாயே திரௌபதா
துள்ளி வருவாயம்மா தாயே திரௌபதா - எங்கள்
துயர் தீர்த்து அருள்தருவாய் அன்னை திரௌபதா

நம்பினோம் காருமம்மா தாயே திரௌபதா - இந்த
நானிலத்தோர் போற்றிடவே அம்மா திரௌபதா
கும்பிட்டோந் தெட்டனிட்டோம் அம்மா திரௌபதா - நீ
கூசாமல் வாருமம்மா தாயே திரௌபதா

அக்கினியில் பிறந்தவளே அன்னை திரௌபதா - பொல்லா
ஆங்கார சக்தியம்மா தாயே திரௌபதா
உக்கிரங் கொண்டவளே அம்மா திரௌபதா - நீ
ஊங்கார சக்தியம்மா அன்னை திரௌபதா

திக்கெல்லாம் போற்றிசெய்ய அன்னை திரௌபதா - எங்கள்
தீவினைகள் அகற்றிடுவாய் தாயே திரௌபதா
முக்காலும் உனைத் தொழுதோம் அம்மா திரௌபதா-எம்மை
முகம்பார்த்துக்காருமம்மா அன்னை திரௌபதா

புதுமலர்கள் இதழ் விரிக்கத் தாயே திரௌபதா - நீ
பூவுலகில் வலம் வருவாய் அம்மா திரௌபதா
கம்பத்தில் வீற்றிருந்து தாயே திரௌபதா - நீ
கருணை தந்து காத்தருள்வாய் தாயே திரௌபதா.

கும்பத்துள் குடியிருந்து அன்னை திரௌபதா - இந்தக்
குவலயத்தைக் காத்தருள்வாய் அம்மா திரௌபதா
கம்பத்தில் வீற்றிருந்து தாயே திரௌபதா - நீ
கருணை தந்து காத்தருள்வாய் அன்னை திரௌபதா

நம்பினோங் காத்தருள்வாய் அன்னை திரௌபதா - அம்மா
நாதாந்தத் தெய்வமடி அம்மா திரௌபதா
கும்பிட்டோம் தெண்டனிட்டோம் தாயே திரௌபதா எங்களை
கூடவந்து காத்தருள்வாய் அன்னை திரௌபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பட்டுத் தானுடுத்து தாயே திரௌபதா - அம்மா
செகமெல்லாம் வலம்வருவாய் அன்னை திரௌபதா
வெண்பட்டுத் தானணிந்து அம்மா திரௌபதா நீ
வீதிவலம் வந்தருள்வாய் தாயே திரௌபதா

துருபத தேசமம்மா தாயே திரௌபதா - அம்மா
தூயவளே நீ பிறந்தாய் அன்னை திரௌபதா
கருணை பொழி கண்ணுடையாய் தாயே திரௌபதா - நீ
காவல் காக்கும் தெய்வமம்மா அன்னை திரௌபதா

பெருமை பெறு சக்தியடி அன்னை திரௌபதா -நீ
பேரானந்தப் பொருளே அம்மா திரௌபதா
மறுமைதனை நீக்கிடுவாய் அம்மா திரௌபதா - எங்கள்
மாதரசி துணைதருவாய் அன்னை திரௌபதா

அக்கினியில் அவதரித்தாய் அம்மா திரௌபதா - நீ
ஆங்கார சக்தியம்மா தாயே திரௌபதா
பக்கத்துணையிருந்து அம்மா திரௌபதா இந்தப்
பாலர்களைக் காத்தருள்வாய் தாயே திரௌபதா

திக்கெல்லாம் புகழ்விளங்க அன்னை திரௌபதா - எங்கள்
தீவினைகள் அகற்றிடுவாய் அம்மா திரௌபதா
எக்கலா தேவியடி அன்னை திரௌபதா - நீ
ஏகாந்த நாரணியே அம்மா திரௌபதா

காக்கக் கடனுனக்குத் தாயே திரௌபதா - எம்மை
கடைக்கண்ணால் பாருமம்மா அன்னை திரௌபதா
தீக்கோலங் கொண்டவளே தாயே திரௌபதா - எங்கள்
தீங் கொழித்துக் காருமம்மா அன்னை திரௌபதா

பஞ்சாட்சரப்பொருளே அன்னை திரௌபதா - நீ
பாண்டிருப்பில் உறைபவளே அன்னை திரௌபதா
தஞ்சம் எமக்கருள்வாய் அம்மா திரௌபதா - உந்தன்
தயவுதந்து காருமம்மா அன்னை திரௌபதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி புகழ் பாடுவோம்

வண்ணமகள் திரௌபதையை வாழ்த்திப்பாடுவோம்
வானுயர ஒலிமுழங்கத் தோத்திரஞ் செய்வோம்
சின்னச் சின்ன மலரெடுத்து மாலை தொடுப்போம்
சீதரன் தங்கைதனைப் போற்றிப் பாடுவோம்.

மண்ணதிரக் குரவையிட்டு வாழ்த்திப்பாடுவோம்
மாவிளக்கு ஏற்றிவைத்துப் பாட்டுப்பாடுவோம்
திண்ணை எங்கும் கோலமிட்டுச் சேர்ந்து பாடுவோம்
திரௌபதைக்கு விழாவெடுத்துப் பாட்டுப்பாடுவோம்

சுண்ணம் வீசிக் கன்னியர்கள் சூழன்றாடுவோம்
சூலவிளக்குத் தானெடுத்து ஊர்வலம் வருவோம்
வண்ண வண்ணப் பட்டெடுத்துச் சாத்திமகிழ்வோம்
வாயார அன்னைதனைப் போற்றிப் பாடுவோம்

விண்ணதிர அம்மன் புகழ் கூறிப்பாடுவோம்
வீதி யெங்குந் தோரணங்கள் கட்டியாடுவோம்
பண்ணோடு இசைபொருந்தப் பாட்டுப்பாடுவோம்
பாண்டிருப்பில் திரௌபதைக்கு விழா வெடுப்போம்.

பதினெட்டு நாள் விரதம் நாமிருப்போம்
பாஞ்சாலி தனைத்துதித்து அருள்பெறுவோம்
புதிதெடுத்து அரிசிகுத்திப் பொங்கலிடுவோம்
பூலோக நாராணிக்கு நாம் படைப்போம்

கிண்ணரம் முழங்கியெழப் பாட்டுப்பாடுவோம்
கீதங்கள் ஒலித்திடவே ஆட்டமாடுவோம்
மண்ணளந்தோன் தங்கையரை வாழ்த்திப்பாடுவோம்
மாதா திரௌபதையை வாழ்த்திப் பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரச் சட்டிகொண்டு நாமாடுவோம்
காளாஞ்சி கையிலேந்தி நாமாடுவோம்
வெற்றிலை பாக்கு வைத்து பாட்டுப் பாடுவோம்
வேதாந்த நாரணியைப் போற்றிப்பாடுவோம்

சற்சோரூப சோதிதனைத் துதித்துப்பாடுவோம்
சாம்பிராணி வாசகியைப் போற்றிப்பாடுவோம்
பொற்சிலம்பு கலகலக்க ஆட்டமாடுவோம்
போதாந்த நாயகியைப் போற்றிப்பாடுவோம்

கற்பூர நாயகியைப் பணிந்து பாடுவோம்
காமாட்சி திரௌபதையைப் போற்றிப் பாடுவோம்
பத்திரமுங் கையேந்தி ஆடிவருவோம்
பராசக்தி திரௌபதையைப் பாடித்துதிப்போம்

அற்புதங்கள் புரிபவளை ஆடித்துதிப்போம்
ஆராத்தி கையிலேந்தி ஆட்டமாடுவோம்
மத்தளம் முழங்கிவர ஆடிவருவோம்
மாதாமனம் மகிழப் பாட்டுப் பாடுவோம்

உத்திரங்கள் பளபளக்கப் பந்தலிடுவோம்
ஊரெங்கும் கொண்டாடிப் பாட்டுப்பாடுவோம்
சித்திரங்கள் விளங்கிடவே கோயிலமைப்போம்
சிறிரங்கள் தங்கைதனைப் போற்றிப்பாடுவோம்

நித்திலங்கள் ஒளிவீசப் பாட்டுப்பாடுவோம்
நீலவண்ணன் தங்கைதனைப் போற்றிப்பாடுவோம்
பக்தியோடு தாயாரைப் பாடித்துதிப்போம்
பாண்டிருப்பில் திரௌபதைக்கு விழாவெடுப்போம்

தத்திமிதி தத்திமிதி என்று ஆடுவோம்
தாளங்கள் இசைத்திடவே நாமாடுவோம்
சித்திதரும் சக்திதனை யேத்திப்பாடுவோம்
சிங்கார வல்லிநாமம் சொல்லிப்பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திதனை துதிசெய்து பாட்டுப்பாடுவோம்
சாமுண்டி ஈஸ்வரியை வணங்கிப்பாடுவோம்
பக்தியுடன் திரௌபதையைப் பாடித்துதிப்போம்
பாண்டிருப்பில் அம்மனுக்கு விழாவெடுப்போம்

உடுக்கை முழங்கிவர ஆட்டமாடுவோம்
ஊரெல்லாம் பறைமுழங்கப் பாட்டுப்பாடுவோம்
துடுக்காய் நடனமிட்டு ஆட்டமாடுவோம்
தூபங்கள் கமகமக்கப் பாட்டுப்பாடுவோம்

அம்மானை கலகலென ஆட்டமாடுவோம்
ஆராத்தி கையிலேந்தி ஆட்டமாடுவோம்
பொன்மாலைதனைச் சூடிப் போற்றிப்பாடுவோம்
போதாந்த சக்திதனை ஏந்திப் பாடுவோம்

சங்கு முழங்கி எழப் பாட்டுப்பாடுவொம்
சங்கீத இசை விளங்கப் பாட்டுப்பாடுவோம்
குங்குமம் சிவப்பேறப் பொட்டிடுவோம்
குவலயத்தில் அம்மன் புகழ் பாடியாடுவோம்

பாலெடுத்து அபிஷேகம் செய்து பாடுவோம்
பண்டாரப் பொட்டிட்டு நாமாடுவோம்
நீலக்கடல் நீராடிக் கொடியேற்றுவொம்
நிரை நிரையாய்க் கும்பமெடுத்தாடிவருவோம்

மாவிலையால் தோரணங்கள் கட்டியாடுவோம்
மடல்தாழைக் காயெடுத்துத் தோரணஞ் செய்வோம்
வீரை விறகுகொண்டு தீவளர்ப்போம்
விண்ணோரும் வியந்திடவே தீ மிதிப்போம்

நித்தமெங்கள் இடர்தீர வணங்குதல் செய்வோம்
நீதிதர்மம் தழைததோங்கப் பாட்டுப்பாடுவோம்
முத்தமெங்கும் கோலமிட்டு ஆட்டமாடுவோம்
மூவுலகும் காப்பவளைப் போற்றிப்பாடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையும் அம்மைபுகழ் விளங்கப்பாடுவோம்
ஏகாந்த நாரணியை ஏத்திப்பாடுவோம்
உத்திராட்சம் துலங்கிடவே ஆட்டமாடுவோம்
உலகத்து நாயகியை வாழ்த்திப்பாடுவோம்

மீனாட்சி அம்மைதனைப் போற்றிப்பாடுவோம்
வருவினைகள் தீர்ந்திடவே வணங்குதல் செய்வோம்
தேனாபிஷேகஞ் செய்து துதிப்போம் நல்ல
தென்னை இளநீரெடுத்து அபிஷேகஞ் செய்வோம்

வானாடர் தேவிதனை வாழ்த்திப்பாடுவோம்
வருவினைக்ள தீர்ந்திடவே வணங்குதல் செய்வோம்
தேவாரம்பாடி நாமும் தினந்துதிப்போம்
தெய்வத்தாய் திரௌபதைக்கு விழாவெடுப்போம்

ஒருபொழுது அமுதுண்டு நாம் வணங்குவோம்
ஓங்காரப் பொருள் தன்னைப் நாம்துதிப்போம்
திருவிளங்கும் கரத்தாளை நாம்துதிப்போம்
தீவினைகள் அகற்றிடவே நாம்துதிப்போம்

பூமாரி பொழிந்திடவே வாழ்த்துப்பாடுவோம்
புண்ணியங்கள் நிலைத்திடவே வாழ்த்துப்பாடுவோம்
பாமாலை தானியற்றிப் பாட்டுப்பாடுவோம்
பாண்டிருப்பில் திரௌபதைக்கு விழாவெடுப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது சென்றான்

தூதுசென்றான் கண்ணபிரான் தூதுசென்றான்
துரியோதனன் சபைக்குத் தூசென்றான்
மாதுமகா லெட்சுமியை மறந்து சென்றான்
மணிவண்ணன் துரியனிடந் தூது சென்றான்

சூதாடிப் பாண்டவர்கள் தோல்வி கண்டார்
சூத்திரனாம் சகுனி கவறாடி வென்றான்
வேதனையால் பாண்டவர்கள் நாடிளந்தார்
வெண்ணையுண்டோன் அவர்க்காகத் தூதுசென்றான்

அதர்மத்தை அழித்திடவே தூதுசென்றான்
தர்மத்தைக் காத்திடவே தூதுசென்றான்
நீதிவேண்டிக் கண்ணபிரான் தூதுசென்றான்
நியாயத்தைக் கூறிடவே தூதுசென்றான்

தேவ குழாம் புடைசூழச் தூதுசென்றான்
தேவகியின் மயிந்தன் நல்ல தூதுசென்றான்
வேதங்கள் பின்தொடரத் தூதுசென்றான்
வேதியர்கள் வாழ்த்தொலிக்கத் தூதுசென்றான்

பாவங்கள் விலகிடவே தூதுசென்றான்
பாண்டவர்க்கு நாடுவேண்டித் தூதுசென்றான்
நேமிதனைக் கையெடுத்துத் தூதுசென்றான்
நெடியோனும் பாண்டவர்களாய் தூதுசென்றான்

ஆவணித்திங்களது நன்னாளிலே
அட்டமித் திதிகொண்ட பொன்னாளிலே
கோபியர்கள் மனங்களிக்க அவதரித்தான்
கோபாலகிருஷ்ணன் வெற்றித் தூதுசென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதுரன்மனை தனையடைந்து இளைப்பாறினான்
வீடுபெறக் கருணைசெய்து வழிகாட்டினான்
மதுமலர்கள் பூத்திருக்கும் பிருந்தாவனம்
மாயக்கண்ணன் குடியிருக்கும் பிருந்தாவனம்

நாரதனும் கண்ணுவரும் விழிநடக்கவே
நாரணனும் நீதி வேண்டித் தூதுசென்றான்
தோரணங்கள் வரவேற்கத் தூதுசென்றான்
தொல்லை தீர்க்கும் மாயோனுந் தூதுசென்றான்

ஆரணங்கள் முழங்கிடவே தூதுசென்றான்
அடியாரைக் காத்தருளத் தூதுசென்றான்
வாரணங்கள் முன் செல்லத் தூதுசென்றான்
வண்ண வண்ணக் குடை நிழற்றத் தூதுசென்றான்

பாரதப் போர் முடிந்திடவே தூதுசென்றான்
பார்த்தனையுங் காத்திடவே தூதுசென்றான்
சூரன்மகன் பிறப்பினையும் கூறச்சென்றான்
சூதாடித் தோற்ற கதை கூறச்சென்றான்

குந்திதேவி மனங்கழிக்க தூதுசென்றான்
குவலயத்தை வாழவைக்கத் தூதுசென்றான்
மைந்தன் கர்ணன் யாரென்று அறியவைத்தான்
மாதவனும் பாண்டவர்க்காய் தூதுசென்றான்

பாதங்கள் சிவப்பேறத் தூதுசென்றான்
பாற்கடலில் துயில் கொண்டோன் தூதுசென்றான்
வேதங்கள் முழங்கிடவே தூதுசென்றான்
வேய்ங்குழலைக் கையேந்தித் தூதுசென்றான்

நாதங்கள் ஒலித்திடவே தூதுசென்றான்
நரசிங்க அவதாரன் தூதுசென்றான்
கீதங்கள் பாடிடவே தூதுசென்றான்
கீதைசொன்ன மாதவனும் தூதுசென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குசக்கரமேந்தித் தூதுசென்றான்
சாமபேததான தண்டமுறை பேசினான்
மங்குல்வண்ண மேனியனுந் தூதுசென்றான்
மகாலெட்சுமி நாயகனுந் தூதுசென்றான்

கோபியர்கள் குரவையிடத் தூதுசென்றான்
கொடுமைகளை அழித்திடவே தூதுசென்றான்
பாவிகளை ரட்சிக்கும் பரந்மானும்
பாண்டவர்க்கு நாடுவேண்டித் தூதுசென்றான்

பூபாரந் தீர்த்திடவே தூதுசென்றான்
புள்ளினங்கள் இசைபாடத் தூதுசென்றான்
ஆவாரம் பூமலரத் தூதுசென்றான்
அகிலமெலாம் அருள்பெருகத் தூதுசென்றான்

கௌரவர்க்கு நீதி கூறத் தூதுசென்றான்
காந்தாரி புதல்வினிடந் தூதுசென்றான்
ஓவ்வாத குணமுடைய துரியோதனன்
ஒரு நொடியில் அளிந்திடவே தூதுசென்றான்

பொய் களவு கொலை சூது புவிமீதிலே
பொருந்தாத செயலென்று எடுத்துரைத்தான்
வையத்துள் மாநதர் வாழும் நெறி முறைதனை
மைவண்ணன் சபைதனிலே எடுத்துரைத்தான்

பை நாகக் கொடிவேந்தன் கேட்டானில்லை
பாரதப் போர் புரிந்திடவே கையறைந்தான்
ஐவரையும் காத்தருளும் பரந்தாமனும்
அரியேறு எனக்கனன்று கைகொடுத்தான்

வையமதில் கௌரவர்கள் மதியிழந்தார்
மைவண்ண மேனியனும் வெற்றி கொண்டான்
பொய்மையோடு வஞ்சனைகள் நிலைக்காதென்று
போதனைகள் செய்யக்கண்ணன் தூதுசென்றான்

தெய்வத்தின் வலிமைதனை அறியாமையால்
தேசுடனே அரசுசெல்வம் யாவுமிழந்தார்
வையகத்தில் கௌரவர்கள் அழிந்தொழிந்தார்
வானோரும் போற்றிடவே ஐவர்வாழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டு நாளில் பாரதம்

தாதனென்றொருவன் வந்தானடி - அவன்
தங்குமிடந்தேடித் திரிந்தானடி
கோடைவெயில் குளிர்பனியும் தன்னைக்
குறும்புகள் செய்திட நின்றானடி

வங்காள விரிகுடாக் கரைவளியே - அவன்
வந்து கொண்ட இந்த வேளையிலே
வசந்தமான மரச்சோலைதனை அவன்
மகிழ்ச்சியினோடு கண்டானடி

கொக்கட்டிய மரச்சோலையிலே - அவன்
கொஞ்சநாள் தங்கியிருக்கையிலே
கண்டசனங்கள் இவனிடத்தே - வந்த
காரணமென்னவென்றே வினவ

பரந்தாமன் தன்சிலை கொண்டுவந்தேன்
பாஞ்சாலிதன் சிலை கொண்டுவந்தேன்
பாண்டவர் தன்சிலை கொண்டுவந்தேன் - அதை
பக்குவம் செய்வது எவ்விடமோ

ஊரவர் வன்னிமை தன்னிடத்தில்
உற்றவை எல்லாம் உரைத்திடவே
ஒற்றுமையாகவே எல்லோருங் கூடி
ஓரிடந்தன்னைத் தேர்ந்தெடுத்து

கொத்துக்குழைகளால் பந்தலிட்டார்
கோல கலங்களும் செய்து வைத்தார்
காலா காலமும் இம்முறை பூசையை
கைவிடக் கூடாதென உரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாத அமாவாசை
பொருந்தவே அண்டிய செவ்வாயில்
பாரத நூல்வளிகாட்டியவாறு
பதினெட்டு நாட்பூசை முறைப்படியாய்

சொல்லிய ஏழாம் நாளதனில்
துவாரகை சென்று கண்ணனையும்
பல்லியமான மௌதாளம்
பந்தல் அலங்காரம் பாருமடி

கற்பூர தீபங்கள் ஏற்றுவாரும்
கையில் சிலம்பு குலுக்குவாரும்
பூரணகும்பங்கள் வீதிகளில் வைத்து
பூமழை சிந்தித் துதிப்பாரும்

அத்தினாபுரமெனும் நற்பதிக்கு
அச்சுதன் கோவிந்தன் வந்ததுவும்
எத்தனை எத்தனை தோரணங்கள்
எட்டுத்திசையும் இலங்குமடி

பன்னிரெண்டாவது நாளதனில்
பற்பல வாத்திய கோசமுடன்
பந்தல் அலங்காரம் பாருமடி
பாண்டிருப்பூர் வலம்பாருமடி

கோயிலின் வீதியில் காவடிகள்
கோலாட்டம் கும்மி குரவையுடன்
மத்தளம் சல்வரி சங்கினிசை
வாய்விட்டுச் சொல்லொனா மாதரசே

வாக்குத் தவறாத பாண்டவர்கள் - வன
வாசத்தைச் சென்று மீண்டவுடன்
அச்சுதன் நீர்த்த யாத்திரைக்கு
ஆன்தோர் செய்தியைக்கோருமடி

பாதாளலோக உலூபியுடன்
பாண்டியன் தன்மகள் தன்னையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிச்சுபத்திரை தன்னுடனே
குறும்புகள் அர்ச்சுனன் செய்தானடி

பாசுபதாஸ்த்திரம் வாங்கவென்று
பரமேஸ்வரன் தனை வேண்டி நின்று
பாசுபதாஸ்த்திரம் பெற்றுவந்து
பாரதப்போரும் முடித்தாண்டி

கார்மேக வண்ணனும் பாஞ்சாலி
காவலர் ஐவர் கொலுவிருக்க
அன்னவர் முன்னிலை தீ மூட்டும்
ஆராதனைகளைப் பாருமடி

பாங்குடனே குரு ஓமம் செய்து
பாஞ்சாலி ஏந்திய வண்ணம் வந்து
அக்குனியூடே ஆராதனை செய்து
அக்கினி மூட்டுவர் பாருமடி

பத்துடன் எட்டுத்தரம் முழுகி
படிமுறையோடு பூசைசெய்து
சீருடன் கங்கை முழுகிவந்து
தீயில் மிதிப்பார்கள் பாருமடி

மற்றைநாள் மாயவர் தர்மருக்கு
மாமுடி சூட்டி மகிழ்ச்சியோடு
பாரதம் வாழியும் பாடிடுவார்
பாலினை வார்த்துப்பயன் பெறுவர்

பாரளந்த மாயவரும் பாஞ்சாலி பாண்டவரும்
சிறக்கக் கொலுவிருக்கும் சிங்கார மேடையிலே
வளர்கின்ற தீ மிதித்து மா விஸ்ணுவைத் தொழுது
ஆலயத்தை சுற்றிவந்து ஆறியிருப்பார்கள்

பாரத்தின் வாழி பாடிமுடிவடைய
ஆதரத்தோடு கண்ணன் அன்பான தருமருக்கு
மாணிக்ககந்தாலான மணி முடியைச் சூட்டியபின்
தீக்குளிக்குப் பால்வார்த்து சித்தம் மகிழ்ந்திருக்க

பரந்தாமன் வாழியவே பற்குணன் வாழியவே
பார்புகழுந் தர்மர் பாஞ்சாலி வாழியவே
வீரநகுல சாதேவன் வாழியவே
மேகம் மழைபொழிய மேதினியும் வாழியவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]


30 [illegible] 70c


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தருவாள் அன்னை திரௌபதி. என்னும் பக்திப் பாடல் நூலைப் போன்று,
மென்மேலும் நூல்கள் வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

# போட்டோ லக்ஸ்


பிரதான வீதி, கல்முனை.







- போட்டோ பிரதிகள்
- பாடசாலை உபகரணங்கள்
- லெமினேற்றிங் மற்றும் காரியாலய காகிதாதிகள்



*ஆகியவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ள கல்முனையில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.*

# PHOTO LUX

**MAIN STREET, KALMUNAI.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org